# செப்டம்பர் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேதபாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.09.2016 வியாழன் | காலை 5.30 மணி | வாக்குத்தத்த ஆராதனை | - - | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 04.09.2016 ஞாயிறு | காலை 8.00 மணி | **அறுவடை திருநாள்** திருவிருந்து ஆராதனை | | அருள்திரு. அறிவர் சாமுவேல் ஜேக்கப் செயலர், சென்னைப் பேராயம் |
| 11.09.2016 ஞாயிறு | காலை 8.30 மணி | திருவிருந்து என்னும் திருவருட்சாதனம் | ஏசே 12 :1 - 14 லூக்கா 22: 7 -20 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 18.09.2016 ஞாயிறு | காலை 8.30 மணி | நுகர்வு கலச்சாரத்திற்கு கிறிஸ்தவரின் புரிந்து கொள்ளுதல் | ஆதி 3 :1 - 17 மத் 6 : 25 -34 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 25.08.2016 ஞாயிறு | காலை 8.30 - 1.00 மணி வரை | முதியோரை பாதுகாத்தல் | வி.பயணம் 20:1 - 17 மாற்கு 7 : 6 - 16 | திரு. அற்புதராஜ் உதவி ஆயர், மருஙூப சிற்றாயம் |

# செப்டம்பர் மாதம் - 2016

# ஆயர்மடல்

பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் திருபெயரால் வாழ்த்துகிறேன். பெண்கள் ஐக்கிய விழா மற்றும் அறுவடை திருநாள் விழா சிறப்பாக நடை பெற்றத்தாக. பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன் உங்கள் முழு ஒத்துழைப்புக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

நமது திருச்சபையின் பல்வேறு எதிர்கால நலத்திட்டங்களை நினைத்து திருச்சபையின் வளர்ச்சியிலும் இறைமக்களின் ஆவிக்குரிய மறுமலர்ச்சியிலும் பூரணமாக வளர நம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்பட ஆசீர்வாதத்தோடு நம்மை ஒப்புவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய குழுக்களும் மற்ற சங்கங்களும் திருச்சபையினுடைய ஆவிக்குரிய அமைப்பு வளர்ச்சிக்கும் அமைப்பின் எதிர்கால திட்டங்களுக்கும் நீங்கள் உதாரத்துவத்தோடு ஈடுபடுவது மட்டுமல்ல, உங்கள் அனுதின ஜெபங்களில் தனித்தனியாக, குடும்பம் குடும்பமாக ஈடுபடுவது இன்றியமையாதது என்பதை ஆழ்ந்த அனுபவத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நமது திருச்சபையின் சேகர குழுவாக, திருச்சபையின் அமைப்புக்கும் எதிர்காலத்தின் முன்னேற்றத்திற்கும் ஆர்வத்தோடு சிந்தித்து தங்களை ஆதாரப்பூர்வாமான செயல்களில் ஈடுபட பரிந்துரை செய்யப்படுகிறது. வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும், ஆத்துமாவும் ஜெப வாஞ்சையுடன் திருச்சபையின் மொத்த வளர்ச்சியில் ஆர்வத்தோடு ஈடுபட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த மாதம் நடைபெற்ற நமது திருச்சபையின் ஊழியங்களில் திரளாய் பங்கு பெற்றதற்காக என்னுடைய நன்றி களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதம் முழுவதும் நடைபெறும் ஊழியங்களில் அனைவரையும் ஈடுபடுத்தி கொள்ள அழைக்கப்படுகிறீர்கள். ஜெபியுங்கள், பங்கு பெறுங்கள், பகிர்ந்து கொடுங்கள், கடவுளின் ஆசி என்றென்றும் தங்குவதாக

அருட்பணியில் உங்கள் ஆயர்

**Rev.Daniel Chelladurai**

## கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு

## கீர்த்தனை எண்.73

### ஏசுவையே துதிசெய் நீ மனமே

1820 ஆம் ஆண்டு சரபோஜி மன்னனாக முடிசூட்டப்பட்டபோது சாஸ்திரியார் அவருக்கு வாழ்த்துப் பா ஒன்றைப் பாடினார் மகிழ்ந்த மன்னன் தான் வணங்கும் தஞ்சை பிரகதீஸ்வரர் மீது ஒரு குறவச்சி படைக்க சாஸ்திரியரை வேண்டினார். இதை எதிர்பாராத சாஸ்திரியர் திடுக்கிட்டார். ஏனெனில் அவர் இயேசு ஒருவரேயன்றி வேறொருவரையும் துதித்து ஆராதிப்பதில்லை. தன் பக்தி வைராக்கியத்தின்படி அரசரிடம் அமைதியாக தன் நிலையை எடுத்து கூறினார். ஆனால் சரபோஜியோ விடுவதாக இல்லை. பாடல்கள் நிறைந்த முழு நூலைப் பாடாவிட்டாலும் ஒரு பல்லவி போன்ற காப்பு செய்யுளையாவது வினாயகர் மீது பாடிக்கொடுக்க வற்ப்புறுத்தினார்.

வேதநாயகம் சாஸ்திரியருக்கு இக்கட்டான நிலை. தன்னை மிகவும் மதித்து அரவனைத்துவரும் அரசரின் வேண்டுகோள் ஒரு புறம். தன்னையே தியாகப் பலியாக கொடுத்த இயேசு ஒருபுறம்.

மிகுந்த மனப் போராட்டத்துடன் சாஸ்திரியார் தன் வீடு திரும்பினார் வேதனையோடு தமது நிலையை மனைவியிடம் கூறினார்.

கடவுளைப் பாடும் வாயால் இப்படியும் ஒன்றைப் பாடப் போறீங்களா – என வினவினார் மனைவி இரவு முழுவதும் யோசித்தார்.

காலையில் மன்னனிடம் சென்று பாடினார்.

ஏசுவையே துதிசெய் நீ மனமே
ஏசுவையே துதி செய் – கிறிஸ்து

மாசணுகாத பராபர வஸ்து
நேச குமரன் மெய்யான கிறிஸ்து
அந்தரவான் தரையுங்குரு தந்தன்
சுந்தர மிகுந்த சுவுந்தரா நந்தன்

எண்ணின காரியம் யாவுமுகிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க

பாடிவிட்டு இறைப்பணியைக் கட்டுப்படுத்தும் பரிசில்களில் தனக்கு நாட்டமில்லை என்பதையும் ஆணித்தரமாகக் கூறினார்.

ஏசுவையே (ஏ) துதி செய்

இயேசுவை மட்டுமே துதி செய் என்று சாஸ்திரியார் பாடினதை கேட்டு இயேசுவின் மேல் சாஸ்திரியார் கொண்ட விசுவாசத்தை மன்னர் பெரிதும் பாராட்டினார். இயேசு தெய்வத்தைப் பற்றி எங்குமே பேச அனுமதி கொடுத்தார்.

ஆதாரம்:பல இணைய தளங்களிலிருந்து எடுக்கப்பட்டது



## யாக்கோபு என்னும் ஒரு கவிஞன் ( புதிய ஏற்பாடு)

வெயில்காய் சோதனை கடவுளிடமிருந்து
வருவதில்லை, வெப்பத்தில் புல்
உலர்ந்தாலும், பூ உதிர்ந்தாலும்.
வெயில் சோதனையை சகி. (வசனம் 1:11,12)

விசுவாசம் ஒன்று தானே? பின் ஏன்
இந்த கோலம்? விசுவாசத்தை
பட்சபாதத்தோடே பற்றிக்கொள்கிறோமே.
எளியவர்மேல் இரக்கம் இல்லை.

பசிக்கிறவர்க்கு ஆகாரம் இல்லை.
உண்மை கிறிஸ்தவனும் இல்லை
வீணனாகாமல் கிரியையில்லாத உன்
விசுவாசத்தை உயிர்ப்பிக்கலாமே,

அது செத்தாயிருக்கிறதே! நா – (வசனம் 2:20)
நெருப்பு ஒரு அநீதி நிறைந்த உலகு
மனிதேன நீ, ஒரு நாளாகிலும், ஒரு
நாடியாகிலும் அதை ஆண்டிருக்கிறாயா?

உவர்ப்பான நீருற்று தர கூடுமோ
தித்திப்பான கனிகளை? பரலோக (வசனம் 3:8)
ஞானம் உண்மையுள்ளது. மாயமற்றது,
சாந்தமுள்ளது: பூலோக ஞானமோ வைராக்கியமும்,

கலகமும் பேய்த்தனமும் உடையது, நீதியை
காணவேண்டுமா? சமாதானத்தின் வழியாக
அல்லாமல் வேறெவ்வாறு காண்பாய், நீ கூறு? (வசனம் 3:18)
கடவுள் கற்பிப்பது – நியாயப்பிரமாணத்தை

கடைபிடிக்க மட்டும் தானே:
மற்றவனை குற்றப்படுத்துகிறதற்காகவா? (வசனம் 4:12)
நம் கடவுள் மிகுந்த உருக்கமும்
இரக்கமுமுள்ளவராயிருக்க நீ ஏன்

பொறுமையாக இருக்க மறுக்கிறாய்?
நீடிய பொறுமை இருதயத்தை
ஸ்திரப்படுத்துமே. ஜெபத்தில் தரித்திருத்தல்
உனக்கு வெற்றி அளிக்குமே! (வசனம் 5:17)

**- Poet Nishada’s**

# கீதங்களை புரிந்து பாடலாமா?

கீர்த்தனை எண் : 1

## சத்தாய் நிஷ்களமாய்

**சங்கராபரணம்** **ரூபகதாளம்**

ஆசிரியர் குறிப்பு: எ.ஆ. கிருஷ்ணபிள்ளை (1827 - 1900)

பிறப்பிடம்: பாளையங்கோட்டை அருகில் கரையிருப்பு கிராமம்

சரணம் 1: (சத்தாய்) என்றுமுள்ளதாள ( நிஷ்களமாய்) உருவமில்லா அல்லது எங்குமுள்ள (ஒரு சாமியமும் முன் இலதாய்) ஒப்புமை ஏதும் இல்லாத இறைவன். (சித்தாய்) அறிவாய் ( ஆனந்தமாய்) அழியாத அறிவின்பம் தருபவராகிய திருத்துத் தெய்வமே. எனப் போற்றி நாயினும் கீழான என் பாவம் நீக்கி மீட்க உம்மையன்றி யாரால் முடியுமெனத் துணைக்கு அழைக்கிறார். சத்து சிந்து ஆனந்தம் ஆகிய முக்கிய குணங்களை உடைய இறைவன் என்பதற்கு பேராயர் கோ. செல்வமணி பின்வரும் கிறிஸ்தியம் விளக்கம் தருகிறார், கிறிஸ்தவ நம்பிக்கையும் விளக்கங்களும் (பக்கம் 243 - 244).

சத்து: (யாத் 3: 14) இறைவனின் இருக்கும் தன்மை (இருக்கிறவராகவே இருக்கிறேன்) என்ற (சித்து) அறிவு (கடவுளின் வார்த்தை) திருமறை குறிப்பையும் வார்த்தையில் உலகை படைத்தார் (ஆதி 1:1) ஆதியிலே வார்த்தை இருந்தது அது மாம்சாமாசிறது (யோவான் 1:14 ) (ஆனந்தம்) ஆவியின் கனி 9 ல் ஒன்று சந்தோஷம்.

சரணம் 2: ( எம்மா விக்குருகி) என் ஆத்துமா அழிவுக்கேதுவாயிருப்பதை எண்ணி உருகி உயிர் தந்து என்னைக் காப்பாற்றுதற்காக கைமாறு என்னிடம் ஏதுமில்லையே. (கடைகாறும் கையடையாய்) இறுதிவரை அடைக்கலமாய் (சும்மா ரட்சணை செய்) = இலவசமாக மீட்பு வேண்டுகிறேன் (சொல் சுதந்திரம்) = அறிவே செல்வமே ஏதும் என்னிடமில்லை. (அம்மான்) = அழகிய கடவுளே.

சரணம் 3: (திரைசேர்வெம்பவமாம்) - நுரையுடன் அலைபாயும் கொடிய பாவக்கடலில் தீவினை செய்ததால் மூழ்கிய பாவி என்னைக் (கரைசேர்த்து) - பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை நான் அடையாதபடி கரைசேர்த்து (உய்க்க) - வாழ்விக்க (புனையாயினை) - தெப்பமானீர்: தெப்பகுளம், தெப்பதிருவிழா என இந்து ஆலயங்களில் உண்டு. தெப்பக் குளத்தின் நடுவே ஓர் மண்டபம் இருக்கும். ஆலயத்திருந்து சிலைகளை அலங்கரித்து அக்காலத்து கட்டுமரமாகிய மிதக்ககூடிய தெப்பத்தில் வைத்து இசையுடனும் பாடலுடனும் குருக்கள் எடுத்துச் சென்று நடு மண்டபத்தில் வைப்பது தெப்பத் திருவிழாவாகும்.இச்சரணத்தின் சிறப்பேதெனில், தெப்பத்தில் சிலைகளும் குருக்களும் ஏறியவுடன் அந்தத் தெப்பத்தின் மரக்கட்டைகள் தண்ணீருக்குள் மேலும் சற்று அமிழ்ந்து நனையும். இதைத்தான், தெப்பத்தின் கட்டைகள் நனைவதைபோல் மழையில் தொப்பக் கட்டையாய் நனைத்திருக்கிறாயே: என்பது பேச்சு மொழியாயிற்று, இதிலுள்ள இறையியல் யாதெனில், தெப்பம் தண்ணீரில் நனைந்தாற்போல் பாவியைக் காப்பாற்றிக் கரைசேர்ப்பதற்காக (புனை) தெப்பமாகச் செயல்பட்ட (மனிதனாகப் பிறந்த தெவகுமாரன்) பாவக்கடலில் நனைந்தார். பாவிகளில் ஒருவராக எண்ணப்பட்டார், (லூக்கா 22:37) சிலுவையில் கள்ளர் நடுவில் அறையப்பட்டார் எனத் திருமறை சுட்டுவதை ஆசிரியர் மறைமுகமாக விளக்குகின்றனர். (கண்ணிலியான்) பாவக்கடலில் மூழ்கும் எனக்குக் கண்தெரியவில்லை கண்ணிலூமன் கடற்பட்டாங்கு என்ற நிலையிலுள்ளேன். (பரசேன்)- மோட்சத்தை உடையவனே, (பற்றுகிலேன்) குட்டி குரங்கு தாய் குரங்கைப் பிடித்தாற்போல் நான் உம்மைப் பற்றிப் பிடிக்க சக்தி இல்லை (பற்றுயபற்றுவிடாய்) நீர் என்னைப் பிடித்திருக்கிறீர் அந்தப் பிடியை (பூனை தன் குட்டியை வாயால் கவ்விச் செல்வது போல்) நீர் விடமாட்டீர்.

சரணம் 4 : (என்னை) என் பக்தி வாழ்க்கையை மதியாது ( ஏயே என்றிகழும்) பரிகாசம் செய்யும் இவ்வுலகில் என் பெற்றோரும், உடன் பிறப்பும், என் ஆலோசகர்களும், செல்வமும், நண்பர்களும் நீயே என்று திருப்தியடைகிறார்.

சரணம் 5: ( துப்பார்) தூய சிந்தனை எனக்கில்லை ( மறைந்தீட்டிய) மறைவாய் செய்த பாவங்களை (துப்பாதே வெளியாய்) - தவறாது வெளியாகும் (நடு நாளெனைத் தாங்கிக் கொள்ள) நியாயத்தீர்ப்பு நாளில் என்னைக் காப்பாற்ற என் பாவங்களை மூடிட, நீக்கிட, மனித குமாரனாகக் ( கோலமெடுத்த) உருவெடுத்த (அப்பா - பரம தந்தையே உம்மையன்றி யார் எனக்குத் துணை? யார் உறவுக்காரர்கள் எனப் பாடுகின்றார்.

குறிப்பு: அனைத்துச் சரணங்களிலும் எதுகைத் தொடையும் ஈற்றடியனைத்தும், ஒன்றியும் அமைத்து, தேவார நடையில் பாடியுள்ளார்.

ஆதாரம்: கீர்த்தனை புதையல், CLC Publications

# வேத வினா - விடை போட்டி

## செப்டம்பர் மாத கேள்விகள்

## முழு வேதாகமம் ( வசன ஆதாரம் தரவும் )

**I எந்த பாவத்திற்கு எந்த தண்டனை?** (வசன இருப்பிடம் தரவும்)

| | |
|---|---|
| i. சோம்பல் | a. கெட்டுப்போதல் |
| ii. அஞ்சணம் குறிபார்த்தல் | b. நரக அக்கினி |
| iii. பெருமையானநாவு | c. ஆஸ்தியை அழிக்கிறான் |
| iv. வேசித்தனம் | d. தரித்திரம் |
| v பின் வாங்குகிறார்கள் | e அறுப்புண்டு போகுதல் |

**II யார் யாரிடம் சொன்னது**

1.உங்கள் பிரயாணம் கர்த்தருக்கு ஏற்றது.

2.உன் வீட்டிற்குப் போ என்றான்

3.குருடரும் சப்பாணிகளும் உன்னைத் தருப்பார்கள்

4.நீங்கள் செய்கிற இந்த காரியம் என்ன?

10. 1+ 200+20+200+20+30+40+10+20+10+2?

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-09-2016**

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி

**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.

குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்

csinewlifeinjesus@gmail.com 9444 633129
**www.csinewlifeinjesus.org**

## பாராட்டுகிறோம்!

பல்வேறு திருச்சபைக்களுக்கு சென்று வெற்றி பெற்ற
வாலிபர் ஐக்கிய சங்க உறுப்பினர்களை பாராட்டுகிறோம்



# சென்ற மாத போட்டியின் விடைகள்

1. எத்தியோப்பியராஜா ஏசாயா 37:9
2. இலக்கியா ஏசாயா ஏசாயா 36:3
3. அஸ்பூக் நெகேமியா 3: 16
4. தலைவன் எஸ்றா 8:17
5. யோத்சதாக் சகாரிய 6:11, ஆகாய் 1:1
6. I. ஏசாயா 7:6
   ii. உன்னதப் பாட்டு 3:10
   iii. மத்தேயு 9:33
   iv. ஆதியாகமம் 45 :2

10. யோபு 1:3

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கலா சுந்தரகுமார்
3. திருமதி. ஜாய்ஸி விமலா
4. திருமதி. ஸ்விட்டிலீன் ரிச்சர்ட்
5. திருமதி. லீலா டிக்சன்
6. திருமதி. மெரில் ஜஸ்டின்
7. திருமதி. ஜூபிலி தர்மராஜ்
8. திருமதி. ரோஸ்லெட் செல்லன்

## படித்ததில் பிடித்தது

Things Money Cannot Buy........

1.Manners
2. Morals
3. Respect
4. Character
5. Common Sense
6. Trust
7. Patience
8. Class
9. Integrity
10. Love

Editor **A.Joseph**

## BIRTHDAYS IN THE MONTH OF SEPTEMBER

| | | | |
|---|---|---|---|
| September 1 | Mr. N.Paul | September 17 | Baby Eunice Giftlin |
| | Mr.M. Amarnath | September 18 | Baby M.Alwin Sam |
| September 4 | Master. P. Caleb Derrick Samuel | September 19 | Mrs. Susheela Barnabas |
| | Mrs. M. Dhanalakshmi | | Mr. Nova Manuel Raj |
| | Mr. Vasudeva Rao | | Mrs. P. Padmavathy Panchanathan |
| September 5 | Mr. P. Christy Douglas | September 20 | Mrs. Rajasundari Jebaraj |
| September 7 | Mrs. Dorothy Jayaraj | | Mrs. D. Gunaseeli |
| | Mrs. Lordy Mary | September 21 | K.Emerson |
| September 8 | Mr. J.Radha Krishnan | September 22 | Mr.A. Aaron John Wesley |
| September 9 | Mr. M. Ramesh Andrews | September 23 | Mr.A. Godwin |
| | Mrs. S. Sushila | September 26 | Mr. R. Solomon Giftson |
| September 10 | Mr. D. Joseph Charles Premkumar | | Baby.R.Carolyne Joanna |
| September 11 | Miss. R. Sharmila | | Baby. A.Ron Daniel |
| | Mrs. E. B. Anbazhagan | September 27 | Mr. V. Justin Thanga Prakash |
| September 12 | Mr. M. T. Richard Thomas | | J. Leah Veronica |
| | Mrs. Preety Manoj | September 28 | Mr. A.Gnanaraj |
| September 13 | Mrs. R.Shantha Kumari | | Master. A.Alwin |
| September 14 | Miss. R. Chrysolite Sheffrina | | Mr. E. K. Raj Kumar |
| | Mr. D. Hubert | September 29 | Mr.C. Sam Sundar |
| September 15 | Mr. A. Jayakumar | | Mrs. R.Nirubha |
| | Mr. C. Paul Ashoke | September 30 | Miss. J. Jency Magdalene |
| September 16 | Mr. I. P. Yesudas | | |

## WEDDING DAYS IN SEPTEMBER

| | |
|---|---|
| September 3 | Mr. J.Reuben Edward & Mrs. S. Tabitha Salome |
| September 6 | Mr. T.Selvaraj & Mrs. A. Charlet |
| September 9 | Mr. D.Joseph Charles Premkumar & Mrs. Jaya Kala Mercy Joseph |
| September 11 | Mr. C. Ravi Joshua Daniel & Mrs. J. Linda Joy Grace |
| September 14 | Mr.P. Christy Douglas & Mrs. Shantha Douglas |
| September 15 | Mr. G. K. David & Mrs. Christy Beaula |
| September 15 | Mr. N. Paul & Mrs. P. Ponnuthai |
| September 16 | Mr. S. Karthik & Mrs. Monica |
| September 26 | Mr. R.Vinu Raja & Mrs. R.Gayathri |



**பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும்**
**அனைவருக்கும் திருச்சபையின் சார்பில்**
**வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**



## திருச்சபையும் - நற்செய்தி பணியும்

வில்லியம் கேரி



17.08.1761 - 09.06.1834

### சாதனையை சரித்திரம் பேசட்டும்

ஓர் செருப்புத் தைக்கும் தொழிலாளியால் உலகத்தை மாற்று முடியும் என்று நம்புகிறீர்களா? நம்பித்தான் ஆக வேண்டும். உலகத்தையே செப்பனிடப் பிறந்தார் வில்லியம் கேரி.

1793ம் ஆண்டு கல்கத்தாவில் காலடியெடுத்து வைத்து இவர் திரும்பி தன் நாட்டிற்குச் சென்றதே இல்லை. நாற்பது ஆண்டுகள் ஆண்டவரின் பணியை அரும்பாடுகள் பட்டு செவ்வனே செய்தார். பிரச்சனைகளும் போராட்டங்களும் இவர் வாழ்வை பின்னிப் பிணைந்தது. தன் அருமை மனைவி மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்டார். குழந்தையும் சுகவீனத்தால் இறந்து போனது.

சோதனைகளை சாதனைகளாக மாற்ற ஆரம்பித்தார். வில்லியம் கேரி. வங்காள மொழியில் வேதாகமத்தைமொழிபெயர்த்து வெளியிட்டார். பல மொழிகளில் வேதாகமம் வெளிவரக் காரணமானார். முழு வேதாகமத்தை 20 மொழிகளிலும், புதிய ஏற்பாட்டை 40 மொழிகளிலும் மொழிபெயர்க்கக் காரணமாயிருந்தவர்.

ஆசியாவில் செய்தித்தாள், நீராவியால் இயங்கும் எஞ்சின், சேமிப்பு வங்கி, தாவரவியல் சங்கம் ஆகியவைகளை முதன் முலாகக் கொண்டுவந்தவர்.

பாடப்புத்தகங்களையும், இலக்கண நூல்களையும் எழுதினார். பள்ளிக்கூடங்களும், ஆதறவற்றோர் இல்லங்களும் இவரால் ஏற்படுத்தப்பட்டன.

சதி, உடன்கட்டை ஏறுதல், குழந்தை திருமணம் போன்ற சமுதாயத் தீமைகளை வேருடன் அகற்றினார். அரசாங்க உதவியுடன் மக்கள் வாழ்வில் ஒளி ஏற்றினார்.

வங்காள உரைநடைத் தந்தை என்றும் தற்கால மிஷனெரி இயக்கங்களின் தந்தை என்றும் போற்றப்படும் வில்லியம் கேரி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட செராம்பூர் பல்கலைக்கழகம் ஆயிரமாயிரம் மாணவர்களை உருவாக்கியது. இன்றும் வில்லியம் கேரியின் புகழை அது பறைசாற்றுகிறது.

அன்பரே! நீங்கள் சரித்திரம் படைக்க ஆயத்தமா?

வாழ்விருந்து வாழ்வுக்கு: கடவுளிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்.
கடவுளுக்காக அரிய காரியங்களை சாதிக்கப்பார்!

தொகுப்பு
**EVA. பால் பன்னீர் செல்வம்**

# அறுவடைத் திருநாள்

அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்... (மத் 9: 37,38 , லூக்.10:12) இவ்வாக்கு இயேசுகிறிஸ்துவின் ஏக்கப் பெருமூச்சின் வெளிப்பாடு தேவன் கிருபையும், மிகுந்த இரக்கமும் உள்ளவர் அவர் கிருபையால் பாவியாகிய நாம் வாழ்ந்து வருகிறோம். "உலக மனிதர் அனைவருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அனைவரும் மனந்திரும்புவதற்காகவே இயேசுவின் வருகை தாமதாகிறது" என்று பேதுரு ( IIபேதுரு 3:9) கூறுகிறார். இயேசு பரலோகத்திற்கு எறுவதற்கு முன் கிருஸ்தவர்களாகிய (சீடர்களாகிய அப் 11: 16) நமக்கு "உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று கட்டளையிட்டார். எனவே சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்பது நம்மேல் சுமத்தப்பட்டக் கடமை என்பதை அறிவோம்.

அறுவடைத்திருநாள் ஓர் அர்ப்பணிப்பின் திருநாள். நாம் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட நன்மைகளுக்கான நன்றியைப் பொருளால், உழைப்பால், நற்செயல்களால் தேவனுக்குச் செலுத்தும் நன்னாள், அன்று, கோலோச்சம் மன்னன் வருமானத்தில் பேணி ஆறில் ஒரு பங்கை மக்களிடமிருந்து வரியாகப் பெற்றுக் குடிமக்களைப் பேணிவந்தான். இன்று நமதிருச்சபையின் வளர்ச்சிக்கு நாம், இவ்வாண்டில் அறுவடை செய்த வருமானத்தில் ஒரு பகுதியைத் தேவனுக்கு அறுவடையின் காணிக்கைப்பலியாக, நன்றிப்பலியாகக் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம்.

அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தப்படியே கொடுக்கக் கடவன் உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். ( II கொரிந் 9:7 ) என்று பவுலடிகள் கூறுகிறார். இப்பெருநாளில் இவ்வசனத்திற்குச் செவி கொடுத்துச் செயல்படுவோம்.

"கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் (லூக் 6: 38) இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள்" ( மாற்: 12 : 7) . இலை இயேசு நமக்குக் கூறிய அறிவுரைகள். வனாந்திர நிலத்தில் வற்றாத நீரூற்றுகளைப் புறப்படப் பண்ணுகிற தேவன் நமக்குக் கடனாளியல்லவே.

மேகம் கடலிடமிருந்து தான் உறிஞ்சிய நிறை மழையாகத் தனது நம்மை மகிழ்விக்கிறது (வாழ வைக்கிறது) நாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு ஈடாக எவற்றைக் கொடுக்கப் போகிறாம்? சிந்திப்போம், "மக்கதொனியா திருச்சபையார் தமக்கு உபத்திரவம், தரித்திரம் இருந்தும் திருச்சபைக்குத் தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள்".



(II கொரிந்தியர் 8:2) என்றுபவுல் அடிகள் கூறுகிறார்

"திருச்சபையின் வளர்ச்சில ஆத்தும ஆதாயம்
ஆத்தும் ஆதயாமே திருச்சபையில் வளர்ச்சி"

அரோக்கியம் பெற்று நன்றி செலுத்த வந்த தொழு நோயாளியிடம், இயேசு சுத்தமானவர் பத்துபேர் அல்லவா? மற்ற ஒன்பது பேர் எங்கே? என்று நன்றி சொல்ல மறந்தவர்களைப் பற்றிக் கேட்கின்றார். இதே வினாவை இயேசு இன்று, நம்மிடத்தும் கேட்கின்றனர், என்ன பதில் சொல்லப் போகிறோம்?

இன்று மாயை நிறைந்த, பாவ இருள் சூழ்ந்த உலகத்தில் தீராத நோய்கள், பலவித நெருக்கங்கள், மனதில் போராட்டங்கள், கண்ணீர், கவலைகள் முதலியவற்றோடு வாழும் நம்மை, ஒவ்வொருநாளும் கண்ணின் மணியைப் போலப் பாதுகாத்து, வழிநடத்தி வருகிற தேவனுக்கு இந்த அறுவடைத்திருநாளில் காணிக்கையாக முதலில் நம்மையும், பின் நம் பொருளையும் அர்ப்பணிப்போம். ஆசீர்பெறுவோம்.

தேவன் நம்மை ஆசீர்வாதிப்பாராக!

கிருஸ்துவில்

அன்புச் சகோதரி **புலவர் புஷ்பா ஞானராஜ்**

## உணவே மருந்து

| | | |
|---|---|---|
| மஞ்சள் | – | புற்று நோய்வராமல் தடுக்கும் |
| மிளகு | – | உணவில் கலந்துள்ள நஞ்சை முறிக்கும் |
| சீரகம் | – | உடல் உள் உறுப்புகளைச் சுத்தம் செய்யும் |
| தனியா | – | நீரழிவு நோய் ஏற்படாமல் தடுக்கும் |
| வெந்தயம் | – | நீரழிவு நோய் ஏற்படாமல் தடுக்கும் |
| இஞ்சி | – | இரத்த உறைவைத் தடுக்கும் |
| | | கொலஸ்ட்ராலைக் குறைக்கும் |

– முகநூல் பதிவிலிருந்து